**<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>**

**<u>நகர்மன்றக்கூட்டம்</u>**

**<u>நாள்.28.9.2018 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.30 மணி</u>**

---

## <u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 28.9.2018</u>

<u>பொருள்: 1</u>

இந்நகராட்சி பதினைந்தாவது மாநில நிதிக்குழுவின் ஆய்வுக்கூட்டம் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் 23.8.2018 அன்று நடைபெற்றது. அதற்குண்டான ஆண்டு அறிக்கை 2014–15 முதல் 2016–17 வரை மூன்று ஆண்டுகளுக்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிக்கு ஸ்கேன் ஒளிநகல் எடுத்த செலவினம் ரூ. 1,200/– (ரூபாய் ஆயிரத்து இருநூறு மட்டும்) இந்நகராட்சி இளநிலை உதவியாளர் திருமதி. மு.லட்சுமிநிவேதா அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 2874/2018/பி1)

**மன்ற தீர்மான எண். 1, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 2</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் சொத்துவரி திருத்தம் செய்வதற்கு சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவம் ஏ4 இளம் நீலம் கலர் பேப்பர் 10000 பிரதிகள், ரூ. 8500/– இளம் சிவப்பு கலர் பேப்பர் 3000 பிரதிகள் ரூ. 3000/–ம் வரிவிதிப்பு கணக்கீட்டு படிவம் 13000 பிரதிகள் ரூ. 8500/–ம் அச்சிட்ட வகையில் பாரதி அச்சகத்திற்கு மொத்தம் ரூ. 20,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மான எண்.2, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 3</u>

இந்நகராட்சி வருவாய் நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிக்கு 2017–18–ம் ஆண்டிற்கு தணிக்கை அறிக்கை தட்டச்சு செய்தமைக்குரிய செலவினம் ரூ. 5,500/– (ரூபாய் ஐராயிரத்து ஐநூறு மட்டும்) திருமதி. பரமேஸ்வரி முருகன் டைப் ஆபீஸ்,மதுரை அவர்களுக்கு வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மன்ற தீர்மான எண். 3, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 4**

சொத்துவரி சீராய்வு சம்பந்தமாக மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ. 4158/—யை மாலை மலர் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்

**மன்ற தீர்மான எண். 4, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 5**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு—23, கவண்டன்பட்டி சாலை நீதிமன்றம் அருகில் உள்ள 4 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள நீர்த்தேக்கத்தொட்டி அமைந்துள்ளது. நீர்த்தேக்க தொட்டியின் படிக்கட்டு சேதமடைந்துள்ளது. இதனால் நீர்த்தேக்கத் தொட்டியின் மேற்புரத்திற்கு செல்வதற்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையாக உள்ளது. மேலும், நீர்த்தேக்க தொட்டியினை சுத்தம் செய்யும் பணி பாதிப்படைகிறது. மேற்கண்ட பணியை குடிநீர் அவசியம் கருதி மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ. 2.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:—**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மன்ற தீர்மான எண். 5, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 6**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு டோனர் 6, ஏ4 பேப்பர் 10 கட்டு வாங்கிய வகையில் ரூ. 25,900/— (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) ஸ்ரீ முருகன் ஸ்டோர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1)

**மன்ற தீர்மான எண். 6, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 7**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்புப்பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை தொடர்ந்து ஐந்து நாட்கள் வழங்கவும் மேலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தேவைப்படும் 100 கி.கீ. நிலவேம்பு பொடியினை பெற்றுத்தரவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 1,00,000/—த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.நிலவேம்பு பொடி அவசர அவசியம் கருதி வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1371/எச்1./2016)

**மன்ற தீர்மான எண். 7, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 8</u>**

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலைய வளாகத்திற்குள் அம்மா உணவகம் அருகில் தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு பின்புறம் உள்ள இடமானது மறைவாக இருப்பதால், விஷமிகள் அவ்விடத்தில் மது அருந்திவிட்டு மதுபாட்டில்களை அங்கேயே போட்டு உடைத்தும், மேலும், போதையில் தாய்மார்கள் பாலூட்டும் அறையின் கண்ணாடியை உடைப்பதும் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பதும் மற்றும் சில தகாத செயல்களை செய்து வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன்கருதியும், தாய்மார்களுக்கு பாதுகாப்பாகவும், மேலும், நகராட்சியின் வருவாயை பெருக்கும் பொருட்டும் மேற்கண்ட இடத்தில் தானியங்கி குடிநீர் மையம் அமைத்திட மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மான எண். 8, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்—9</u>**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018—19—ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34ற்கான விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.14—ல் ‘‘மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Machine) நிறுவப்படும்’’ என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பேரில் உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் 24 தானியங்கும் குடிநீர் மையங்கள் தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்தவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 432.00 இலட்சத்திற்கும் மற்றும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** — மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மான எண். 9, நாள். 28.09.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்—10</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 100 எச்.பி. மோாட்டார்கள் கொண்ட மோட்டார் அறை உள்ளது. எனவே, 100 எச்.பி. மோட்டார் அறையை பாதுகாக்கவும், மோட்டாரை இயக்கவும் இரவுக்கும், பகலுக்கும் சேர்ந்து 4 பேர்களை கொண்டு காவல் பணி மேற்கொள்ளவும், வைகை பேரணையியில புதியதாக போடப்பட்டுள்ள மூன்று உறிஞ்சு கிணறுகளை இயக்க 10 எச்.பி. மோட்டார் 3 எண்ணம் கொண்ட ஒரு மோட்டார் அறை உள்ளது. இம்மோட்டார்களை இயக்கவும், பாதுகாக்கவும் 2 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும், மேலும், உசிலம்பட்டி நகராட்சி பேருந்து வளாகத்திற்குள் உள்ள 4 இலட்சம் கொள்ளளவுள்ள இரண்டு நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இவ்வளாகத்தை பாதுகாக்கும் பொருட்டு இரண்டு பணியாளர்ளும் ஆக மொத்தம் 10 பணியாளர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 1617/2018/இ2, நாள். 7.6.2018—ன்படி Water Cemer-க்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ. 3280—யை நிர்ணயம் செய்யப்பட்டு 01.11.2018 முதல் 30.4.2019 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5,50,000/—க்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்

2). மேற்கண்ட பணிக்கான செலவை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி